இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 226 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 13 – வியாழக்கிழமை 27 மார்ச் 2025 – சென்னை 28 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 226 : Thiruvalluvar Year - 2056 - Panguni 13 - Thursday 27 March 2025 - Chennai 28 Pages ₹ 5.00



## இருமொழிக் கொள்கை:

# தமிழ்நாட்டின் மானம் காக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## மிரட்டலுக்குப் பயந்து அ.தி.மு.க.வை அடகு வைக்கும் எடப்பாடி பழனிசாமி!

**சென்னை,மார்ச்.27-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசின் மிரட்டலுக்கு அஞ்சாமல் “இருமொழிக் கொள்கை பணப் பிரச்சினை அல்ல : நம் இனப் பிரச்சினை: இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை; தமிழ்நாட்டின் மானப் பிரச்சினை” என்கிறார். எடப்பாடி அவர்களோ, ஒரு மிரட்டல் வந்தவுடன் அ.தி.மு.க-வையே அடகு வைக்கிறார் !**

**இது பற்றிய விவரம்:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2025) செவ்வாய்க்கிழமை பேரவையில் இருமொழித் திட்டம் குறித்து உரையாற்றுகையில், “இன்று காலையில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. டெல்லிக்குச் சென்றிருக்கும் நேரத்தில் யாரைச் சந்திக்கப் போகிறார் என்ற அந்தச் செய்தியும் வந்திருக்கிறது. அப்படிச் சந்திக்கும் நேரத்தில் இருமொழிக் கொள்கை குறித்து அவர் அங்கே வலியுறுத்தவேண்டும் என்ற வேண்டுகோளை, இந்த அவையின் மூலமாக நான் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்” என்று குறிப்பிட்டார்கள்.

ஆனால், நேற்று வெளிவந்துள்ள செய்தி அதற்கு மாறாக உள்ளது. அதாவது, டெல்லி சென்ற நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், தம்முடைய கட்சி நிர்வாகிகளுடன் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களைச் சந்தித்துச் சால்வை அணிவித்து மகிழ்ந்திருக்கிறார்.

### எடப்பாடிக்கு அமித் ஷா எச்சரிக்கை!

சிறிது நேரத்தில் அவருடைய கட்சி நிர்வாகிகளை வெளியே அனுப்பி விட்டு, அமித்ஷா அவர்கள் எடப்பாடி பழனிசாமியிடம் பேசி இருக்கிறார். அப்போது அமித்ஷா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் உறவினர் ரூ.650கோடி வரி முறைகேட்டில் ஈடுபட்டதாக அமலாக்கத்துறை கண்டுபிடித்து அதற்குரிய ஆதாரங்களையெல்லாம் காட்டி, எச்சரிக்கை விடுத்து, பா.ஜ.க. கூட்டணிக்குச் சம்மதிக்க வேண்டும். சம்மதிக்காவிட்டால், மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டப்பட்டுள்ளார்.

அந்த மிரட்டலுக்கு அஞ்சி பா.ஜ.க.வோடு, கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறிவந்த எடப்பாடி பழனிசாமி அவர்கள், பா.ஜ.க-வுடன் கூட்டணிக்குச் சம்மதம் தெரிவித்து வந்ததாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

எடப்பாடி பழனிசாமியின் மகன் மிதுன். அவருடைய (மிதுன்) சகலையின் அப்பா ஈரோட்டைச் சேர்ந்த இராமலிங்கம். இதனால், கடந்த அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் இராமலிங்கத்திற்கு ஏராளமான கான்ட்ராக்ட்கள் வழங்கப்பட்டன. இந்த இராமலிங்கம் என்பவரின் வீடுகளில் அமலாக்கத்துறையும் வருமான வரித்துறையும் சோதனைகள் செய்து பல ஆவணங்களை கைப்பற்றி இருந்தன.

இராமலிங்கத்தின் வீட்டில் வரி ஏய்ப்பு குறித்து கட்டுக்கட்டாக ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. மேலும், அ.தி.மு.கவின் மூத்த தலைவர்களின் ஊழல்கள் குறித்தும் ஏராளமான ஆவணங்களை அமலாக்கத்துறை, வருமான வரித்துறை சேகரித்து வைத்திருந்தது. மொத்த ஆவணங்களையும் எடப்பாடி பழனிசாமியிடம், அமித்ஷா காட்டி, எச்சரிக்கும் தொனியில் பேசியதாகக் கூறப்படுகிறது. கூட்டணிக்குச் சம்மதிக்காவிட்டால் அ.தி.மு.க. தலைவர்கள் பலருக்கும் சிக்கல் வரும். முதலில் உங்களிடம் இருந்துதான் ஆரம்பிக்கும் என்று கூறியதாகவும் கூறப்படுகிறது.

### ஆவணங்களைப் பார்த்து அதிர்ந்த எடப்பாடி!

அமித்ஷா காட்டிய ஆவணங்களைப் பார்த்ததும் எடப்பாடி பழனிசாமியே அதிர்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த அதிர்ச்சி அமித்ஷா வீட்டில் இருந்து வெளியே வந்த பின்னரும் நீடித்துள்ளது. காரில் செல்லும் வழியில் எடப்பாடி பழனிசாமி யாரிடமும் பேசாமல் சென்றுள்ளார். தம்பித்துரை வீட்டுக்குச் சென்ற பிறகுதான் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினார். என்று கூறப்படுகிறது.

> **அமித்ஷா காட்டிய ஆவணங்களைப் பார்த்ததும் எடப்பாடி பழனிசாமியே அதிர்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த அதிர்ச்சி அமித்ஷா வீட்டில் இருந்து வெளியே வந்த பின்னரும் நீடித்துள்ளது. காரில் செல்லும் வழியில் எடப்பாடி பழனிசாமி யாரிடமும் பேசாமல் சென்றுள்ளார். தம்பித்துரை வீட்டுக்குச் சென்ற பிறகுதான் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினார் என்று கூறப்படுகிறது.**

### பா.ஜ.க.விடம் மண்டியிட்ட எடப்பாடி!

மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான், சமக்ர சிக்சா திட்டத்திற்கு நிதி தரமுடியும் என்று கூறி ரூ.2,152கோடி நிதியை தமிழ்நாட்டிற்குத் தரமுடியாது என பா.ஜ.க அமைச்சர் ஆணவத்தோடு நாடாளுமன்றத்தில் கூறி மிரட்டிய போதிலும்,

**இது பணப் பிரச்சினை அல்ல;**
**நம் இனப் பிரச்சினை;**

இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை எனவே 2ஆயிரம் கோடி அல்ல; ரூ.10ஆயிரம் கோடியைக் கொடுத்தாலும் புதிய கல்விக் கொள்கையை, மும்மொழித் திட்டத்தை, இந்தித் திணிப்பை ஒருநாளும் ஏற்கமாட்டோம்; இருமொழிக் கொள்கையை என்றும் கைவிடமாட்டோம் எனத் துணிச்சலாகப் பதில்கூறி, தமிழ்நாட்டின் மானத்தைக் காத்தவர் - காத்து வருபவர் நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஆனால், உறவினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மிரட்டிய உடனேயே எடப்பாடி பழனிசாமி அவர்கள் மண்டியிட்டு பா.ஜ.க-விடம் கூட்டணிக்குச் சம்மதம் தெரிவித்து வந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றனவே!



தமிழ்மொழியைக் காக்க, தமிழ்நாட்டின் இளைஞர்களைக் காக்க, தமிழ்நாட்டின் மானம் காக்க, தமிழ்நாட்டிற்கு எதிரான ஒன்றிய அரசின் மிரட்டலுக்கு அஞ்சாமல் அதை எதிர்த்து நிற்கும் திராவிட நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கு முன்னால், ஒரு மிரட்டல் வந்ததுடன் தலைகவிழ்ந்து குனிந்து நின்று, பாதம் தாங்கும் பழனிசாமி அவர்கள், தமிழ்நாட்டை ஏற்கனவே, சீர்குலைத்துடன், மீண்டும் தற்போது, தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நிதி தராமல் தொடர்ந்து வஞ்சித்துவரும் ஒன்றிய பா.ஜ.க.-வுடன் கூட்டுச் சேரப் பணிந்திருப்பது அ.தி.மு.க-வின் சுயநல ரூபத்தைத்தான் காட்டுகிறது.

இது தமிழ்நாட்டிற்கு நல்லதல்ல.

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மார்ச் 29-ல் தி.மு.க. ஆர்ப்பாட்டம்!

**கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிக்கை**

2-ஆம் பக்கம்

